**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 393** **நாள் : 20.11.2025**

**சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி தொடர்பாக 200 உடற்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்ற மனித சங்கிலி மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் – 2026க்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில், வாக்காளர்கள் கணக்கீட்டுப் படிவம் பூர்த்தி செய்து வழங்குதல் தொடர்பாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சென்னை மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதிகள், பூங்காக்கள், பள்ளிப் பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல், மக்களிடையே செல்லும் மின்கல வாகனங்களில் ஆடியோ மூலம் விளம்பரப்படுத்துதல், வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வண்ண ரங்கோலி கோலமிடுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, இன்று (20.11.2025) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் 200 உடற்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்று விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, மனித சங்கிலி மூலம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி தொடர்பாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**